பதிவு எண்: M. 6311 ★ தோலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 16உ (1—9—67) வெள்ளி ★ வெளியூர்: ஆவணி 17உ (2—9—67) சனி [இதழ்: 67

இந்திய அரசியலில் மாநிலம் ஓர் கம்பவுண்டர்!

"இந்தியாவின் அரசியல் அமைப்பில் மாநிலங்கள், மருந்து கலக்கித் தரும் 'கம்பவுண்டர்'களைப் போலத்தான் இருக்கின்றன—டாக்டர்களாக இல்லை!"!

—அறிஞர் அண்ணா

(தென்னிந்திய வணிகக் கழக ஆண்டுவிழாவில்)

பெரியவர் பேசிய சின்னப் பேச்சு!

புதுடில்லியில், மெல்லத் திரை இன்று விலகிற்று!

கொடுமைக்கார 'இந்தி'யர்கள் பொல்லாத கோலம், தெள்ளத் தெளிவாய் நாட்டுக்குத் தெரியவந்தது!

'மறைவாகப் பிறமொழிகள் அழிப்பதற்கோர் மணியான திட்டம் ஒன்று எங்களிடம் உண்டு' என்று மத்திய ஆட்சி தெளிவாக்கிவிட்டது!

'இந்தி திணிக்கப்படுகிறது; மறைமுகமாய்த் திணிக்கப்படுகிறது; இதை அனுமதிக்கக்கூடாது' என்று நாம் குரல் கொடுத்த காலத்தில், 'இந்த மாய்மாலப் பேச்சு மூலம் மக்களை மயக்கிட முனையாதீர்' என்று மூலை முடுக்கெல்லாம் பேசிய—விஷயம் புரியாத—காங்கிரசுப் பேச்சாளர்களுக்கு இது ஓர் அறைகூவல்!

"ஆம்; இந்தியைத் திணிக்கிறோம்; அதையும் மறைமுகமாகத்தான் திணிக்கிறோம்; மறைமுக வழியில் தவறென்ன?"—கொஞ்சம் ஆணவத்தோடுதான் கேட்டிருக்கிறார்?

கேட்டிருப்பவர், பெரியவர்! இந்தியத் துணைத் தலைமையமைச்சர்: ஆனால் அவர் வாதங்கள்தான், சின்னத்தனமாய் சிறுபிள்ளை வாதங்களாய் இருக்கின்றன!

"இந்திய அரசியல் சட்டத்தின்படி இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் சட்டமன்றத்திலிருந்து பதவி விலகுங்கள்" என்கிறார் அந்த மேதை!

நிறைந்த தமிழுணர்வோடு எதிரே பேசிக்கொண்டிருந்தவர் தமிழகச் சட்ட அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள்!

நாடே வெறுத்து ஒதுக்கும் இந்த மொரார்ஜியின் ஒரு சில சொற்களில், வடநாட்டு இந்தி வெறியர்களின் கையற்ற நிலை—அதன் விளைவான ஆத்திரம்—இவை, தெளிவாகப் பிரதிபலிக்கின்றன!

"இந்தி ஆட்சி மொழி ஆவதில் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள், பாவிகளே! விலகித் தொலையுங்கள்!"

என்று அவர் மனம் எண்ணுகிறது; ஆனால், சொல்லத்தான் முடியவில்லை! இந்தியாவின் தென்கோடியில் அமைதியாய்ப் புரட்சி செய்து ஆளுங்கட்சியை மாற்றி அமைத்த மூன்று கோடித் தமிழர்கள், திரு. மாதவன் பின்னால் தெரிகிறார்களே!

ஆனால் ஆணவம் அவர் பேச்சில் தொனிக்காமல் இல்லை.

"அரசியல் சட்டத்தின் கீழ் நீங்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதை நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால், சட்டமன்றத்திலிருந்து விலகிவிட வேண்டும்"

என்றார் இந்த ஞானப்பிரகாச மாமுனி!

நன்றாக மண்டையில் அடிப்பதுபோலப் பதில் சொன்னார்—அமைச்சர் மாதவன்!

"அரசியல் சட்ட ஷரத்துக்கு எங்கள் ஆட்சேபத்தைப் பதிவு செய்துள்ளோம்; அதைத் திருத்தவேண்டும் என்றும் கோரியுள்ளோம்."

பொது அறிவுள்ளவர்களுக்கு—புரிந்துகொள்ளக்கூடியவர்களுக்கு இது போதும்!

1947-க்கு முன்னால் பண்டித நேருவின் தலைமையில் 'இடைக்கால சர்க்கார்' அமைத்தார்களே, காங்கிரசுக்காரர்கள்—அவர்கள், மேன்மை தங்கிய பேரரசர்—இங்கிலாந்து நாட்டின் முடியரசர்—ஆறாம் ஜார்ஜ் மன்னருக்குத் தங்கள் முழு விசுவாசத்தையும் தெரிவித்துத்தான் ஆட்சிப் பீடமேறினார்கள் என்பதைப் பணிவுடன் நினைவுபடுத்துவோமாக!

அவ்வளவு ஏன்? இந்திய அரசியல் அமைப்பின் வழிகாட்டித் தத்துவங்களில் ஒன்றாக அல்லவா உரிய இடம் பெற்றிருக்கிறது மதுவிலக்கு?

அதை, மொரார்ஜியின் சொந்தக் கட்சிக்காரர்கள் பரிபாலனம் செய்யும் எத்தனை மாநிலத்தில் மதித்தார்கள்?

அப்படியானால் அரசியல் சட்டத்தை மதிப்பதாய்ப் பதவி ஏற்ற அந்த மாநிலக் காங்கிரசு அமைச்சர்கள் நிலை என்னவோ?

இருக்கிற இடம் பார்த்துக்கொண்டு பேசலாம் பெரியவர்கள்! ஆனால் அற்ப ஆசை விடுகிறதா?—ஏதோ வெட்கமறியாமல் உளறிவைக்கத் தூண்டுகிறது!

மொரார்ஜியின் 'பிடிவாதம்' பற்றி வெளியே பேசிக்கொள்கிறார்கள்!

ஆனால், தமிழரின் மனத்திண்மையும் உலகிற்குத் தெரியும்!

இருந்தும் சிறுபிள்ளை வாதங்களில் ஈடுபடுகிறார் பெரியவர் மொரார்ஜி!

—முத்து

மொழி வெறியின் உச்சக்கட்டத்தில் மொரார்ஜி — தமிழக அமைச்சர் மாதவனின் தருணமறிந்த விளக்கம்

'தமிழ்நாடு இந்தியாவின் பகுதி என்பதை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன்'

—மொரார்ஜி தேசாய்

'அந்த இந்திய ஒற்றுமைக்காகத்தான் நாங்கள் ஆங்கிலத்தை விரும்புகிறோம்'

—செ. மாதவன்

தேசாயின் கண்மூடித்தனமான வாதம்—மாதவன் தந்த கருத்துமிக்க பதில்

புதுடில்லி, செப். 1—மத்திய சட்ட அமைச்சர் பி. கோவிந்த மேனனால் நேற்று புதுடில்லியில் கூட்டப்பட்ட மாநிலச் சட்ட அமைச்சர்கள் மாநாட்டில், நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய்க்கும்—தமிழகச் சட்ட அமைச்சர் செ. மாதவனுக்கும் இடையே, தேசிய—இணைப்பு மொழிப் பிரச்சினையில் கடுமையான வாக்குவாதம் நடந்தது.

ஓர் இடத்தில், மொழி வெறியின் உச்ச நிலையினால் உந்தப்பட்ட துணைத் தலைமையமைச்சர், 'நாம் என்ன பேசுகிறோம்' என்பதனையும் அறியாமல்,

"சட்டத்துக்கு மதிப்பு அளித்துப் பதவி உறுதி மொழி எடுத்திருக்கிறீர்கள்; (இந்தி பற்றி) கருத்து மாறுபாடு என்றால், (சட்டமன்ற உறுப்பினர் பதவியை) இராஜினாமாச் செய்யுங்கள்"

என்று கூறியிருக்கிறார்.

'சட்டங்களை, ஐந்தாண்டுக் காலக் கட்டத்தில், இந்தி மற்றும் மாநில மொழிகளில் மொழி பெயர்த்துவிட வேண்டும்' என்று தனது துவக்க உரையில் கூறிய மொரார்ஜி தேசாய்,

"எல்லா இந்திய மாநிலங்களும் இந்தியை ஓர் இணைப்பு மொழியாக ஏற்றுக்கொண்டுவிட்டன"

என்று கூறியபோது, உடன் அமைச்சர் மாதவன் எழுந்து, தக்க மறுப்புத் தெரிவித்திருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து துணைத் தலைமையமைச்சருக்கும்—மாதவனுக்கும் இடையே 'சூடான' கருத்து மோதுதல் நடந்தது!

"இந்தியை இணைப்பு மொழியாக மாநிலங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன" என்று தேசாய் கூறியபோது, உடன் அமைச்சர் மாதவன்,

"தமிழ்நாடு இந்தியை இணைப்பு மொழியாக ஏற்றுக்கொள்ளவில்லை"

என்று திருத்தம் தந்தார்.

"அரசியல் சட்ட விதிமுறைகளையே நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா?" என்று தேசாய் பிரச்சினையை திசைத் திருப்பினார்.

"ஏற்கனவே நாங்கள் எங்கள் எதிர்ப்பினைக் காட்டியிருக்கிறோம்; (நீங்கள் கூறுகிற) அரசியல் சட்டத்திலும் திருத்தம் கோரியிருக்கிறோம்"

என, தமிழக அமைச்சர் மாதவன் தந்த விளக்கம், தேசாயின் மனதை உறுத்தியிருக்க வேண்டும்; தத்தளித்த நிலையில்—தப்பித்துக் கொள்ள, பிரச்சினையைவிட்டு வேறொரு புறம் சென்றிருக்கிறார்—

"அரசியல் சட்டத்தின் கீழ் நீங்கள் உறுதிமொழி எடுத்திருக்கிறீர்கள். அதற்கு ஒத்துப் போகவில்லையென்றால், (சட்டமன்ற) பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும்; இந்தியாவைவிட எந்த மாநிலமும் பெரிதல்ல; எந்த மாநிலமும் இந்தியாவிலிருந்து பிரிந்து செல்லவும் முடியாது; காலமும் சூழ்நிலையும் உங்களை இந்தியைக் கற்கவைக்கும்"

என்றார் தேசாய்.

"காலப்போக்கில் ஆங்கிலம் தனது உபயோகத்தை இழக்கும்; அந்த இடத்தில் இந்தி வந்து நிரப்பும்" என்று தனது உரையின் மற்றோர் இடத்தில் தேசாய் கூறியபோது,

"இது, இந்தியை மறைமுகமாகத் திணிக்கும் ஒரு போக்கு"

என்று மறுப்புக் கொடுத்தார் திரு. மாதவன்.

பதிலை ஏற்றுக்கொள்ளாத துணைத் தலைமையமைச்சர், 'மொழி வெறி போதையில்,

"மறைமுக வேலைகள் எனக்குப் பிடிக்காதவை அல்ல; காரண காரியத்தை உணர்த்துவதற்கு மறைமுக—நேர்முக முறைகள் இரண்டுமே தேவைதான்; இதில் மறைமுக வேலை தான்சிறந்த முறை; தமிழ்நாடும் இந்தியாவின் ஒரு பகுதிதான் என்று நினைக்கிறேன்"

என்று அமைச்சர் மாதவனை நோக்கிக் கூறியிருக்கிறார்.

"நிச்சயமாக இந்தியா ஒன்றாக இருக்க வேண்டுமென்ற ஒரே காரணத்துக்காகத்தான், நாங்கள், 'ஆங்கிலம் தேவை' என்கிறோம்"

என்று, 'தேசாயின் பாணி'யிலேயே அமைச்சர் மாதவன் தந்த பதிலுடன், வாக்குவாதம் முடிந்திருக்கிறது!

மாநாடு முடிந்ததும், அமைச்சர் மாதவனிடம் தனித்து உரையாடிய தேசாய்,

"தென்னவர்கள் மிகவும் புத்திசாலிகள்; இங்கேகூட ஏராளமான பேர் இருக்கிறார்கள்"

என்று கூறியிருக்கிறார்.

"அதிகமான பேர் இருக்கிறார்கள் என்பதற்காகத்தான் அவர்களைக் குறைக்க விரும்புகிறீர்களா?"

என்று சிரித்துக்கொண்டே அமைச்சர் மாதவன் பதிலுக்குக் கேட்டிருக்கிறார்!

பீகார்—புதுடில்லி பிளவுபடுகிறது

காமராசர் கட்டளைக்கு மதிப்பில்லை—'மண்டல்' தலைமைக்கு மாநிலக் காங்கிரசு ஆதரவு

"மண்டல் தலைமையில் அமைந்திருக்கும் 'சோஷித் தள' அமைப்புக்கு ஆதரவு தருவது என்று நாங்கள் தீர்மானித்துவிட்டோம்"

என்று பீகார் மாநில காங்கிரசுத் தலைவர் இராசேந்திர மிஸ்ரா, புதுடில்லியில் செய்தியாளர்களிடையே கூறியிருக்கிறார்.

'சோஷித் தள' அமைப்புடன் சேர்ந்து காங்கிரசு, பீகாரில் கூட்டு அமைச்சரவை அமைக்கக் கூடாது—என்ற காங்கிரசுத் தலைவர் காமராசரின் யோசனையைப் புறக்கணிக்கும் வகையில், பீகார் காங்கிரசு இந்த முடிவுக்கு வந்திருக்கிறது!

கவைக்குதவாத

அலங்காரத் திட்டங்களுக்குச் செலவிடும் மத்திய அமைச்சர்!

இரயிலைப் பிடிக்கச் செல்லும் மாட்டு வண்டிப் பயணிகள் நிலையில் மாநில அரசு!

அரசு ஊழியர்களிடை முதலமைச்சர் அண்ணா கூறிய உவமை

சென்னை, ஆக. 31—

"நிர்வாகத் துறைக்கு உடனடியாகத் தேவைப்படுவதை விடுத்து, அதற்குப் பாதகமான முறையில் வெறும் அலங்காரத் திட்டங்களையே கைக்கொண்டுள்ளது மத்திய அரசு"

என்று, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இடித்துரைத்தார்கள்.

நேற்று நடைபெற்ற தமிழக அரசின் செயலக ஊழியர் சங்கத்தின் ஆண்டுவிழாவில் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டார்கள்.

"சில மாட்டு வண்டிக்காரர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற குறைந்த வருவாயிலிருந்து, மாட்டுக்குச் சலங்கை வாங்கிப் பூட்டி அலங்கரிப்பார்கள்: அதே நேரத்தில், அந்த மாடு கரடுமுரடான சாலையிலும் வேகமாகப் போவதற்கு மிகவும் இன்றியமையாத லாடம் அடிக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட வண்டிக்காரர்களைப் போல் நமது மத்திய நிதியமைச்சர் செயலாற்றுகிறார்" என்றார் அண்ணா.

"தமிழக அரசைப் பொறுத்தவரையில், தனது ஊழியர்களின் பிரச்சினைகளை முழு அளவில் அறிந்து வைத்திருக்கிறது; அவர்களின் குறைகளை போக்க தன்னால் இயன்றதையெல்லாம் செய்யும்'என்று உறுதிமொழியளித்தார் அண்ணா.

"இரயிலேறச் செல்வதற்கு மாட்டு வண்டியில் சென்று கொண்டிருக்கும் பிரயாணிகள், வண்டி வேகமாகச் செல்ல முடியாத நிலையில் இருக்கும்போது, இரயிலைப் பிடிக்க முடியுமா என்று தவித்துக் கொண்டிருப்பதைப் போல் மாநில அரசு இருக்கிறது" என்றார்.

இந்த விழாவுக்கு,செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமைவகித்தார்.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், விழா மலரை வெளியிட்டார்.

திரு. ம. பொ. சிவஞானம் சிறப்புரையாற்றினார்.

அரசுத் தலைமைச் செயலாளர் திரு. ஏ. இராமகிருஷ்ணன் பேசுகையில், அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளும், பதிவுபெறாத அதிகாரிகளுடன் தோழமையுணர்ச்சியுடன் நடந்து கொள்வதைப் பாராட்டி வரவேற்றார்.

சங்கத் தலைவர் திரு. கே. ஏ. ஸ்ரீதரன் முசாத் அனைவரையும் வரவேற்றார்.

செயலாளர் திரு. ஆர். சம்பத்குமார் ஆண்டறிக்கை படித்தார்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நடிகர் ஜெயசங்கர் பரிசு வழங்கினார்.

இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு

மலைத் தோட்ட முதலாளிகட்கு அண்ணா வேண்டுகோள்

அரசின் கடன் பத்திரங்களில் முதலீடு செய்ய ஆய்வுரை

குன்னூர், ஆக. 31—

"இலங்கையிலிருந்து வெளியேறி வரும் ஆயிரம் பேருக்கு மலைத் தோட்டங்களில் வேலைகொடுக்க வேண்டும்; இலங்கையிலிருநது வரவிருக்கும் இந்திய மக்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் மலைத் தோட்டங்களுக்கு மூன்று ஆண்டுக் காலம் வரி ஒய்வு அளிக்கும்படி மத்திய அரசிடம் கோருவேன்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், தமிழக மலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் 14-ம் ஆண்டு மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அண்ணா அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது :—

"மலைத் தோட்டத் தொழிலுக்கு இன்னும் சிறந்த வசதிகள் அளிக்க வேண்டும்; வரிகளிலிருந்து நிவாரணம் தரவேண்டும்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள ரூ. 17 கோடி கடன் பத்திரங்களில் தாராளமாக முதலீடு செய்யும்படி மலைத் தோட்ட அதிபர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசியலில் நிலையான தன்மையைக் குறித்தோ, தமிழகத்தின் வருங்காலப் பொருளாதார அமைப்பைப் பற்றியோ எவ்வித அச்சமும் வேண்டியதில்லை. பல ஆண்டுகளாகப் பாடுபட்டு உறுதியாக அமைத்ததாகும் இந்தக் கட்டுக்கோப்பு.

ஆளும் கட்சி மாறுவதாலேயே அரசின் நிர்வாக அமைப்பு மாறிவிடாது. கோடிக்கணக்கான மக்களின் குறைந்தபட்ச தேவைகளைத் திருப்தி செய்ய வேண்டுமென்பது அரசின் நோக்கம். அரசின் முயற்சிகளில் மலைத் தோட்ட அதிபர்கள் ஒத்துழைப்பர் என்று எதிர்பார்க்கிறேன்."

'இந்திராகாந்திமீது இன்னமும் நம்பிக்கை வைத்திருக்கிறேன்'

தமிழர்களின் விருப்பத்துக்கு மாறாக நடந்தால் மாணவர் கொதித்தெழுவர்

கோவைச் செய்தியாளரிடை அறிஞர் அண்ணா

கோவை, ஆக. 29—

"மொழிப்பிரச்சினையில் தலைமையமைச்சர் தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தை மதித்து நடப்பார் என்றே இன்னும் நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்; நமக்காக அவர் அனுதாபம் காட்டுவார் என்றுதான் நான் கருதிக் கொண்டிருக்கிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சென்னையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தியை மாணவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

தஞ்சையில் ஓர் 'அக்டோபர் புரட்சி'

தமிழகத்தின் நெற்களஞ்சியம் சரித்திரம் படைக்கிறது!

ஆனைகட்டி போரடித்த சீமையில் நெல் உற்பத்தி அறுபது சதவிகிதம் உயர இருக்கிறது!

'நிலச் செழுமை --- நீர் வளம் --- பசுமைக் கடல்'--- தஞ்சைத் தரணி பற்றி வங்காள நாளிதழ்

"நாங்கள் இந்த அக்டோபரில் தஞ்சையில் ஒரு புரட்சியை எதிர்பார்க்கிறோம்; ஆனால் இது, 'இரஷ்ய மாதிரி' அல்ல—வேறு ஒரு வகையில்! வருகிற அக்டோபரில் இந்த மாவட்டம், ஆண்டின் நெல் உற்பத்தியில் அறுபது சதவிகிதத்தைக் கூடுதலாகக் கொடுக்கப் போகிறது"

என்று, தமிழக அரசின் விவசாய டைரக்டர் திரவியம் அளித்த பேட்டி ஒன்றை மையமாகக் கொண்டு, கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மன்' நாளிதழில் (28–8—67), எம். பி. லால் என்பவர் ஒரு சிறப்புக் கட்டுரை வரைந்துள்ளார்; அதன் முக்கிய பகுதிகளாவன :—

"திரு. திரவியம் விவரித்தது எந்த வகையிலும் அதிகமானது அல்ல; பெருமூச்சு விடத்தக்க மாற்றத்தை இன்றையத் தஞ்சை மாவட்டம் பெற்றிருக்கிறது!

எங்கும் ஒரே பசுமைக் கடல்; அதன் நடுவில் இங்கும் அங்குமாகத் தென்னை-பனை-மூங்கில் வரிசைகள், காற்றில் அசைந்தாடி நிற்கின்றன!

நெல் வயல்களுக்கிடையே வளைந்து வளைந்து செல்லும் பாதை! அதன் பக்கங்களில் மழை நீர்த் தேக்கங்கள்! வாய்க்கால் வடிகால்கள்!

இதே பகுதிக்குச் சென்றஆண்டு ஒருவர் வந்திருந்தால், அப்போது கண்ட நிலைமை வேறாகத்தான் இருந்திருக்கும்; அன்று இந்தப் பசுமை இல்லை; வயல்கள் நீரை எதிர்பார்த்த நிலையில் ஏங்கிக் கொண்டிருந்தன! பசுமை இப்படிக் கொழித்திருக்கவில்லை!

மாநிலத்தின் நெற்களஞ்சியத்துக்கு தஞ்சைத் தரணி இந்த ஆண்டு கூடுதலாக 6,00,000 டன் நெல்லைத் தர இருக்கிறது!

இதற்குமுன் ஒரு போகமேபெருவாரியாகப் பயிராகிவந்த பல பகுதிகள் இப்போது 'ஏடிடி 27' என்ற குறுகிய கால இருபோகச் சாகுபடியில் தீவிரமாக வெற்றி கண்டு விளைச்சலைக் கொடுக்க இருக்கின்றன!

ஆகஸ்டில் விதை விதைத்து சனவரி—பிப்ரவரி மாதங்களில் அறுவடை செய்யும் பழைய முறை இப்போது இங்கு இல்லை!

அதைவிடக் குறுகிய காலத்தில் மிக அதிக விளைச்சலைக் கொடுக்கும் 'ஏடிடி 27' நெல் முறை, அங்கு கடைபிடிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் போகமாக குறுவைச் சாகுபடி செய்வது தஞ்சைக்குப் புதியதல்ல; ஆனால் அதைவிடச் சாதகமான 'ஏடிடி 27' இருபோக முறை இந்த ஆண்டுதான் தீவிர அமுலுக்கு வந்துள்ளது!

தஞ்சையில் இருக்கும் 1,02,000 ஏக்கர் பயிர் நிலங்களில் இன்று 500 டிராக்டர்கள் உழுதுகொண்டிருக்கின்றன! இவைகளில் 36 டிராக்டர்கள் அரசினருடையவை!

கடந்த ஆண்டு 25,000 ஏக்கர்களில் மட்டும் கடைபிடிக்கப்பட்ட தீவிர சாகுபடி முறை, இந்த ஆண்டு 6,00,000 ஏக்கர்களில் விரைவாக அமுலாக்கப்பட்டிருக்கிறது!

கடந்த ஆண்டு ரூ. 3 கோடி அளவில் விவசாயிகளுக்கு எருக் கடன் வழங்கப்பட்டது; இந்த ஆண்டு அத்தொகை ரூ. 6 கோடியாக உயர்த்தப்பட்டது!

ஆனால் சென்ற ஆண்டு இத்திட்டத்தின்கீழ் எத்தனை அரசினர் அலுவலர்கள் இருந்தார்களோ அதே எண்ணிக்கையினர்தான் இந்த ஆண்டும் இருக்கின்றனர்! இந்த நிலைமையுடன்தான் சாகுபடி முறை தீவிரமாக்கப்பட்டிருக்கிறது — இரட்டிப்பாக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின்கீழ், ஒரு நவீன 'ஆப் செட்' அச்சகமும் இயங்கிவருவது பலருக்கு ஆச்சரியத்தைத் தரும்!

தகவல் அதிகாரி ஒருவர் இந்த அச்சகத்தின் உதவியைக் கொண்டு, தீவிர விவசாயத் திட்டத்துக்கான அத்தனைச் செய்திகள்—விளம்பரங்கள் அனைத்தையும் அச்சிட்டு விநியோகிக்கிறார்!

வானொலி—பத்திரிகைகள் மூலமாகவும், உழவர்களுடன் இத்திட்ட அதிகாரிகள் தொடர்பு கொண்டு தகவல்கள் தருகின்றனர்!

மழைக் காலத்தில் அறுவடை வருவதால், நெல்லின் ஈரத்தைப் போக்கும் 30 இயந்திரங்கள், இத்திட்டத்தின்கீழ் இயங்கிவருகின்றன!

—தமிழாக்கம்: எஸ். ஆர்.

ஆங்கிலத்துக்கு அடுத்ததாக வளர்ச்சி பெற்றுள்ள இந்திய மொழி தமிழ்!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வளம் பெற்று ஆறுயிரம் ஆண்டு வரலாற்றையுடைய மொழி அது!

'நாடாளுமன்றத்திலும் வழக்கு மன்றத்திலும் பயன்படுத்தும் தகுதியும் அதற்கு உண்டு'---அறிஞர் அண்ணா விளக்கம்

கோவை, ஆக. 29—

"தமிழ்மீது அளவு கடந்த பற்றுதலைக் கொண்டிருப்பதை வெறித்தனம் என்று சிலர் கூறுகிறார்கள்; தங்கள் தாய்மொழி மீது பற்று மிகுந்திருப்பது ஒவ்வொருவருக்கும் உள்ள பிறப்புரிமையாகும்; பிற மொழி ஆதரவாளர்கள் உரிமையில் குறுக்கிடுவதுதான் தவறானதாகும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு சுட்டிக் காட்டினார்கள்.

அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் பேசிய அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது :—

"கல்வித்துறையிலும், ஆட்சித் துறையிலும் எல்லாக் கட்டங்களிலும் தமிழைப் பயன்படுத்த வேண்டும்; இதுவே மக்களின் விருப்பமும், அரசின் உறுதியும் ஆகும்.

நமது தாய்மொழியான தமிழ், செழித்த மரபும், சொல் வளமும் மிக்க பண்டை மொழியாகும். ஈராயிரம் ஆண்டுக்கு முன்பே தமிழ் ஆட்சி மொழியாகவும் வழக்கு மன்ற மொழியாகவும் இருந்திருக்கிறது. ஆறுயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட வரலாற்றையுடையது தமிழ்.

பண்டைத் தமிழகத்தில் 'அறங்கூறவையம்' எனப்பட்ட வழக்கு மன்றத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழ்ச் சொற்கள் பல இன்றும் உள்ளன. எனவே, தமிழைப் பலதுறைகளிலும் பயன்படுத்துவது ஒன்றும் கடினமானதல்ல!

வழக்கு மன்றத்தில் தமிழைப் பயன்படுத்துவதில் வழக்கறிஞர்களிடையே உள்ள அச்சத்தைப் போக்க விரும்புகிறேன்.

நாட்டில் ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக நல்ல முறையில் வளர்ச்சியடைந்துள்ள மொழி தமிழ் என்பது என் கருத்து; அதனைச் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பயன்படுத்த முடியும்.

கடந்த பதினைந்தாண்டுகளில் தமிழ் உணர்வு வியக்கத்தக்க விதத்தில் வளர்ந்துள்ளது. நான் கல்லூரியிலே படித்தபோது, தமிழ் வகுப்புக்கு வெளியே தமிழ்ச் சொல்லையே கேட்டதில்லை. இப்போது பொறியியல், மருத்துவக் கல்லூரி மாணவர்களும் தமிழை நன்கு அறிந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

தொழிற் கல்லூரி மாணவர்கள்

(4 ம் பக்கம் பார்க்க)

எதற்கெடுத்தாலும் டில்லியை எதிர்பார்ப்பதா?

மாநில அரசுகளின் அவலநிலை

மேற்கு வங்க அமைச்சரின் மனக்குமுறல்

சென்னை, ஆக. 31—

"மாநில அரசை எதிர்நோக்கியிருக்கும் எந்தப் பிரச்சினையானாலும், அதனைச் சமாளிக்க மத்திய அரசையே நம்பியிருக்க வேண்டியுள்ளது; மிகக் குறைந்த அதிகாரங்களை வைத்துக்கொண்டு மாநில அரசுகள் இயங்க வேண்டியிருக்கிறது"

என்று, மேற்கு வங்க வருவாய்த்துறை அமைச்சர் அரிகிருஷ்ண கோனார் இங்கு தெரிவித்தார்.

"நக்சல்பாரி நிகழ்ச்சிகள் வெறும் நிலப் பிரச்சினை தொடர்பானவையே என்று அரசு கருதுவதால், நிலச் சீர்திருத்தக் கமிஷனிடம் அதன் பணியை விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது" என்றார் அவர்.

மேற்கு வங்கத்தில் ஐக்கிய முன்னணி ஆட்சிப் பொறுப்பேற்றபின் சாதித்துள்ள சாதனைகளையெல்லாம் அமைச்சர் கோனார் விவரிக்கையில் தெரிவித்ததாவது:—

"கடந்த ஐந்து மாத காலத்தில், 1,60,000 ஏக்கர் உபரியாக இருந்த நிலம், நிலமில்லாத விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது; இந்த நிலத்தில் 4,000 ஏக்கர், தேயிலைத் தோட்டங்களாகும்.

மேற்கு வங்க அரசு தனது ஊழியர்கள் அனைவரின் ஊதியங்களையும் மாற்றியமைக்க ஊதியக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

முதலாளிகள் நீதி வழங்கத் தவறும் நேரத்தில் தொழிலாளர் தங்கள் உரிமையைப் பெறுவதற்குரிய போராட்ட முறைகளில் ஒன்றுதான் 'கேரோ' என்பது. இப்படிப்பட்ட 'கேரோ'க்கள் நடக்கும் நேரங்களில் அரசு நடுநிலைமை வகிக்கிறது.

கல்கத்தாவில் சட்டம்—ஒழுங்கு குலைந்துவிடவில்லை.

மேற்கு வங்கத்துக்கு மத்திய அரசு 11 இலட்சம் டன் உணவுத் தானியம் ஒதுக்குவதாக உறுதி மொழியளித்தது; ஆனால் 15 இலட்சம் டன் கேட்டிருந்தோம். அண்மையில் நடந்த போராட்டத்தின் விளைவாக இன்னும் சிறிது கூடுதலாகக் கிடைக்க இருக்கிறது."

கட்டாய ஆங்கிலக் கல்வி

இலங்கை அரசு நடவடிக்கை

இலங்கையிலுள்ள எல்லாப் பள்ளிகளிலும் அடுத்த ஆண்டிலிருந்து ஆங்கிலம் கட்டாயப் பாடமாக்கப்படுகிறது.

மாணவர்களுக்கு ஐந்தாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

இதற்கு முன்பு இலங்கையை ஆண்டுவந்த பண்டாரநாயகா அரசாங்கம் ஆங்கிலத்தை விருப்பப் பாடமாக்கியிருந்தது.

இன்றைய அரசு அந்தச் சட்டத்தை மாற்றியமைத்துள்ளதாக இலங்கை கல்வியமைச்சர் அறிவித்துள்ளார்.

செலவைக் குறையுங்கள்

டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகளை வாங்குங்கள்

FERODO
Brake Linings



பஸ், லாரி சொந்தக்காரர்கள் எவரை வேண்டுமானாலும் கேளுங்கள். டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகள் சிறந்தவை. நீண்ட நாள் உறுதியாக உழைக்கும்.

காரணம்: உறுப்பு உற்பத்தியாளர்களில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர்

உழைப்பிற்கு ஆராய்ச்சி செய்யப் பெற்ற உறுப்புகளையே டிவிஎஸ் விநியோகிக்கிறது.

TVS

டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம் சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (A.P.) மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் - பங்களூர்

mas-4248

இந்திரா காந்தி மீது...

[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

சந்தித்தது குறித்துச் செய்தியாளர்கள் கேட்டதற்கே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்ணா அவர்கள் மொழிப் பிரச்சினை குறித்து மேலும் கூறியதாவது:—

"மொழிப் பிரச்சினை பற்றித் தமிழக அரசு தனது கருத்தை விளக்கி, மத்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளது.

தலைமையமைச்சர் இந்திரா காந்தியும், மாணவர்கள் கூறியதைப் பொறுமையுடன் கேட்டறிந்தார்.

பல்வேறு மாநிலங்களின் உணர்ச்சிகளையும், கோரிக்கைகளையும், அவர் கேட்டறிய இருக்கிறார் என்பதே அவரது பதில்களிலிருந்து தெரியவருகிறது.

"இந்தி பேசாத மக்களுக்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியால் உண்மையான பாதுகாப்புக் கிட்டும் என்பதில் மனநிறைவுகொண்டிருக்கிறீர்களா?"

என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு அண்ணா அளித்த பதில் வருமாறு:—

"அது, தனிப்பட்டவர்களின் திறமையினாலும், நல்லெண்ணத்தாலும் ஏற்படக்கூடியதல்ல; நாம் உருவாக்குகிற வேலைத் திட்டத்தைப் பொறுத்தே உள்ளது; தலைமையமைச்சர் அனுதாபத்துடன் நடந்துகொள்வார் என்றே நான் இன்னமும் கருதுகிறேன்."

"மொழிப் பிரச்சினையில் மாநில அரசு பொறுப்பேற்று மத்திய அரசுடன் வாதாடி வருகிற நேரத்தில், மாணவர்களில் ஒரு சாரார் போராட்டம் நடத்த முற்படுவது சரி என்று கருதுகிறீர்களா?!'

என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"அவர்கள்(மாணவர்கள்) ஏமாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டால் பிறகு போராட்டத்தில் அவர்கள் இறங்குவதை யாராலும் தடுத்து நிறுத்தமுடியாது."

'எளிய மக்களின் பிரதிநிதிகள் நாங்கள்'

'இயற்கையும் எங்களுக்குத் துணை செய்கிறது'

வரவிருக்கும் 'அமோக அறுவடை'— அறிஞர் அண்ணா பெருமிதம்!

"'இயற்கை' எவருடைய ஏகபோகமும் அல்ல! புதிய அரசின் உதவிக்கு இயற்கை வெகுவாகத் துணை செய்திருக்கிறது!

"அக்டோபரில் வரவிருக்கும் 'அமோக அறுவடை', 'கழக நிர்வாகத்தின் சாதனை' என்று பெருமை கொள்ள மாட்டேன்!

"அதிகாரிகள் உழவர்கள் ஆகியவர்களோடு இயற்கை எங்களுக்கு பெரிதும் உதவிபுரிந்திருக்கிறது! இந்த ஆண்டில் நல்ல மழை—எனவே, நல்ல விளைச்சல்!

"அக்டோபரில் தஞ்சை மாவட்டம், பெரும் அறுவடையைத் தரவிருக்கிறது!

"மக்களின் உணவுப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டால், பின்னர், இயற்கையாகவே நாட்டின் கவனமும் உழைப்பும், பொருளாதாரப் பிரச்சினைகளில் திரும்பும்;"

(தென்னிந்திய வணிகக் கழக ஆண்டு விழாவில்)

ஆங்கிலத்துக்கு அடுத்ததாக...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் ஓய்வு நேரத்தில் தமிழைப் படிக்க வேண்டும்; சிறந்த தமிழறிஞர்களை அழைத்து அவர்களுடைய சொற்பொழிவுகளைக் கேட்கவேண்டும்.

தமிழில் நல்ல பயிற்சி பெருதவர்கள், தங்கள் குறைபாடு பற்றி வெட்கப்படாமல், தொடர்ந்து தமிழில் பேசவும் எழுதவும் வேண்டும்."

காந்தியார்

பிறந்த நாளில் கள்ளுக்கடை திறப்பு

மைசூர் காங்கிரசு அரசின் மகத்தான காரியம்

இன்று முதல் (செப்டம்பர் 1) ரத்து செய்யப்பட இருந்த மதுவிலக்குச் சட்டத்தை, மைசூர் மாநில அரசு ஒரு மாத காலம் தள்ளிவைத்திருக்கிறது.

தெரிந்தோ தெரியாமலோ தள்ளி வைக்கப்பட்டிருக்கிற அக்டோபர் முதல் தேதிக்கு அடுத்த இருபத்தி நான்காவது மணி நேரம்தான், மது ஒழிப்பை உயிர்க் கொள்கையாக—உயிர் துறக்கும்வரையில் மதித்துக் காப்பாற்றிய காந்தியடிகளின் பிறந்த தினமாகவும் இருக்கிறது!

தற்போது மைசூர் மாநிலத்தின் 19 வட்டங்களில் 16 வட்டங்களில் மதுவிலக்கு அமுலில் இருந்து வருகிறது.

ஒரு சில இடங்கள் தவிர, மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் தள்ளிவைக்கப்பட்டிருக்கின்ற தேதி முதல் மதுவிலக்கு ரத்தாகிறது!

மைசூர் மாநில அரசின் மதுவிலக்கு ஒழிப்பினைப் பற்றி இரண்டு நாட்களுக்கு முன் வானொலி பேட்டியொன்றில் கூறிய தேசாய்,

'தவறான வழியில் நிதி சேர்க்கும் முயற்சி'

என்று விளித்திருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

வளர்ந்து வரும் மக்கள் தேவைகள் சமுதாய முன்னேற்றத்திற்கு அறிகுறி

பொருளாதாரச் சித்தாந்தத்துக்கு அறிஞர் அண்ணாவின் கருத்தோட்டமிக்க விளக்கம்

"'தேவை' ஒரு உணர்வு மட்டுமல்ல— அது, முன்னேற்றத்தின் அறிகுறியும் ஆகும்.

"மக்களின் தேவைகள் நாளுக்குநாள்— இல்லை; மணிக்கு மணி—அல்ல; நிமிடத்துக்கு நிமிடம் வளர்ந்து வருகின்றன!

"அதிகரித்து வரும் தேவைகள் ஒருபுறம் பிரச்சினைகளைக் கொடுத்தாலும், மறுபுறம் வளர்ந்து வரும் சமுதாய முன்னேற்றத்தைக் காட்டுவதாக இருக்கிறது.

"புதிது புதிதாக ஆங்காங்கே கல்லூரிகளும், தொழிற்சாலைகளும், எல்லாப் பகுதியினராலும் விரும்பப்படுகிறது.

"இது, 'முன்னேற வேண்டும்' என்ற சமுதாயத்தின் 'ஆசை'யைக் காட்டுகிறது; இந்தத் 'தேவை'கள் பூர்த்தியாகும்போது, உண்மை முன்னேற்றமும் கிடைக்கிறது!"

—தென்னிந்திய வணிகக் கழகத்தில் அண்ணா

பஞ்சாலைகளின் வேலை நாள்

புதுடில்லி, ஆக. 30—

செப்டம்பர் முதல் நாளிலிருந்து நாட்டிலுள்ள எல்லா பஞ்சாலைகளிலும் வார விடுமுறை நாள் நீங்கலாக வாரத்தின் மற்ற ஆறு நாட்களிலும் வேலை நடக்கும். இந்த ஆண்டு நாட்டில் நல்ல பருத்தி விளைச்சல் எதிர்பார்க்கப்படுவதாலும், போதுமான இரக்குமதிப் பொருள் எதிர்பார்க்கப்படுவதாலும், இந்த வேலை நாள் அதிகரிப்பதற்கு வாய்ப்பளிக்கிறது.

வேதாரண்யம் பேரூராட்சி

வேளாண்மை அமைச்சரை வரவேற்கும்

வேதாரண்யம் பேரூராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம், தலைவர் திரு. ஆர். நடராஜ பிள்ளை தலைமையில் நடைபெற்றது; அதுபோது, 4—9—67-ல் வேதாரண்யம் வருகைதரவிருக்கும் வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ.கோவிந்தசாமிக்கு வரவேற்பு அளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

முன்னும் பின்னும்!

"துவக்கத்திலும் — பிறகும் — கடைசியிலும் நாம் நம்மை எப்பொழுதும் இந்தியர்களாகவே கருதிக்கொள்ள வேண்டும்"

என்று இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் வி.வி. கிரி கோட்டயத்தில் பேசுகையில் கூறினார்.

"நான் கேரளத்தை மிகவும் நேசிக்கிறேன்; 'கேரள வாசி' என்றே என்னை நான் கருதிக் கொள்கிறேன்" என்றும் அவர் அதே பேச்சில் குறிப்பிட்டார்.

தென்னகப் பல்கலைக் குழுவின் மற்றொரு புதிய கலை நிகழ்ச்சி அரங்கேற்றம்

★

3--9--67 ஞாயிறு மாலை 6 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

மு. கருணாநிதி

அவர்கள் தலைமையில்

சதாசிவம் — மோகனா குழுவினரால்

'அண்ணாவின் அரசு'

என்ற கலை நிகழ்ச்சி நடைபெறும்.

நன்கொடை: ரூ. 2, 1, 50 காசுகள்

விவரங்களுக்கு:—

மு. வரதராசன், 325, திருவல்லிக்கேணி ஐரோடு, சென்னை-5

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன்

சென்னை நிகழ்ச்சிகள்

செப். 2: மாலை 7-மணிமுதல் 9 மணிவரை: சென்னை சட்டக்கல்லூரி பட்டதாரிகள் நாள் விழா.

செப். 3: காலை 10-30 மணி: திரு. ம. பொ. சி. நூல் வெளியீட்டு விழா—திருவல்லிக்கேணி இந்து உயர் நிலைப்பள்ளி.

செப். 4: மாலை கலைவாணர் விழா.

செப். 5: மாலை 6-30 மணிமுதல் 9-மணிவரை: காஞ்சி மணிமொழியார் பாராட்டு விழாக் கூட்டம்.

கருநாடக மாநில தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம்

"கருநாடக மாநில தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், 3—9—67 காலை 10-மணிக்கு, பெங்களூர் மாநிலக் கழகப் பணிமனையில் நடைபெறும். மாநிலக் கழகப் பிரதிநிதிகளும், துணை மன்ற நிர்வாகிகளும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"அண்ணா பிறந்த நாள் விழா குறித்து கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்"

என்று கருநாடக மாநில தி.மு.க, அமைப்பாளர் தி. திராவிடமணி அறிவிக்கிறார்.

குமாரி விஜயா

குழுவினரின்

'ஆளுகின்றார் அண்ணா'

நிகழ்ச்சிகள்

செப். 2: கிள்ளை; 4: சென்னை 16-வது வட்டம்; 7: சென்னை 97-வது வட்டம்; 8: சின்னசேலம்; 10: பண்ணைவிளை; 15: மேட்டுப்பாளையம்; 17: தாராபுரம்; 18: கரூர் 19-வது வட்டம்; 19: திருவரங்கம்; 20: திருச்சி; 21: அறந்தாங்கி; 22: தவுட்டுப்பாளையம்; 23: கோவை; 25: வளவனூர்; 26: தென்னிலை; 27: வெங்கமேடு; 28: ஈரோடு; 29: செல்லப்பம்பட்டி.

திருமணம்

சென்னை மாநகராட்சி மத்தியக் குழு உறுப்பினரும் முன்னாள் துணை மேயருமான தோழர் இரா. சடகோபனின் தங்கை செல்வி: தனலட்சுமிக்கும்— செல்வன்: கண்ணனுக்கும் 3—9—67 காலை 9 மணிக்கு தியாகராயநகர்— கிரியப்பா ரோடு மாநகராட்சித் திருமண மண்டபத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்; அறிஞர் அண்ணா, ம. பொ. சிவஞானம், மற்றும் அமைச்சர்களும் கழக முன்னணித் தோழர்கள், கலைஞர்களும் வாழ்த்துரை வழங்குவர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

2--9--67

சென்னை 71-வது வட்டம்

எஸ். எஸ். ஆர். மன்ற முதலாண்டு விழாவும், மலர் வெளியீடும்: இரவு 7-மணிக்கு, பங்காரு நாயக்கன் தெருவில் (பிளாசா பின்புறம்); தலைவர்: வா. மாரியப்பா; மலர் வெளியிடுபவர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்; பேசுவோர்: எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., டி. வி. நாராயணசாமி, நீ. மணிமாறன், மு. வரதராசன், கே. இராசு, ஏ. எம். அலி, எம். முருகேசு.

3--9--67

தாரமங்கலம்

கலைவாணர் நினைவு விழா; இரவு 7 மணிக்கு, ஊர்ச்சாவடி மைதானம்; தலைவர்: என். முத்துசாமி; பேசுவோர்; கே. ஆர். கோவிந்தன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., ஆ. சின்னையன், டி. சி. குமரசாமி, ஏ. கந்தசாமி, டி. எஸ். மாதேசன், எஸ். எஸ். பெருமாள், சி.பழனி எம்.எல்.ஏ.

தல்லாகுளம்

கலைவாணர் நினைவுநாள் விழா; இரவு 7-மணிக்கு பெருமாள் கோயில் அருகில்; தலைவர்: மா. சு. நீலமேகம்; பேசுவோர்: ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ; எஸ். முத்து எம்.எல்.சி., கு. திருப்பதி பி.ஏ.,பி.எல்., சொ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ,, ச. ச. வேலன், பொ. இராமச்சந்திரன்.

கலைவாணர் விழா

கலைவாணரின் 11-வது ஆண்டு நினைவுநாள் விழா 2—9—67 மாலை 5-30 மணிக்கு தியாகராயர் நகர் வாணி மகாலில் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும்; அறிஞர் அண்ணா, கி.ஆ.பெ. விசுவநாதம், அப்துஸ்சமது எம்.பி., எஸ்.டி.சுந்தரம் எம்.எல்.சி. ஆகியோர் சிறப்புரையாற்றுவர். மதுரை சோமுவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

குழுக் கூட்டம்

திருப்பூர் நகர தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் 3—9—67 மாலை 3 மணிக்கு குமரன் சாலையிலுள்ள வழிப்போக்கர் விடுதியில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பட்டது.